அன்பளிப்பு - 25p


# தமிழீழ விடுதலைப்புலிகள்

வெளியீடு 6 மே 86


## பொதுமக்களும் போராளிகளும்

அடிமைப்படுத்தப்பட்டிருக்கும் தமிழீழ மக்களின் பரந்துபட்ட ஆதரவுடன் நாம் செயற்பட்டுவரும் இவ்வேளையில், எம்மக்களிடமே கொள்ளையடித்தும், வழிப்பறி செய்தும், கப்பம்வாங்கியும், இயக்கத்தின் பெயரைச்சொல்லிப் பணம்சேகரித்தும் வரும் சமூக விரோதக் கும்பல்கள் எமது தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு குந்தகம் விளைவிக்கின்றன. விடுதலைப் போராளிகளை ஒடுக்குமுறை அரசிற்குக் காட்டிக்கொடுப்பவர்போல இச் சமூகவிரோதச் செயல்களைச் செய்யும் சமூக விரோதக் கும்பல்களும் துரோகிகளே.

**'இயக்கம்' என்ற பெயரில், போராளிகள்' என்ற போர்வையில், 'போராட்டம்' என்ற சாக்கில் நாளாந்தம் நடைபெற்றுவரும் சமூக விரோத நடவடிக்கைகளோ எண்ணற்றவை. தனியார் நிறுவனங்கள், சமூக ஸ்தாபனங்கள், கல்வி நிலையங்கள், மத பீடங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் சதா சூறையாடப்பட்டு வருகின்றன. ஏழைத் தொழிலாளர்களின் ஊதியங்கள் கொள்ளையடிக்கப்படுகின்றன. வயோதிபர்களின் ஓய்வுப் பணம் அபகரிக்கப்படுகிறது. தனியார் வாகனங்கள் கண்டபடி கடத்தப்படுகிறது. பணமாகவும், பொருளாகவும் மக்கள் சொத்து சதா பறிக்கப்பட்டு வருகிறது. இதனால் ஒட்டுமொத்தமாக தொழிலாளர்கள், விவசாயிகள், அரச ஊழியர்கள், மத குருக்கள், மாணவர்கள், வயோதிபர்கள் என்ற ரீதியில் பரந்துபட்ட மக்கள் பாரிய அளவு பாதிக்கப்பட்டுள்ளனர்.**



சிறீலங்கா ஆயுதப்படையினரின் கெடுபிடிகளால் நொந்துபோயிருக்கும் எம்மக்களை "வெந்த புண்ணிலே வேல்பாய்ச்சுதல்"போல 'மேலும் நோகவைக்கும் விதத்தில் இச்சமூகவிரோதக் கும்பல்கள் செயற்பட்டு வருகின்றன. ஆக்கிரமிப்பு இராணுவத்தினதும், இச்சமூகவிரோதிகளினதும் அச்சுறுத்தல்களுக்கு அடிபணியாது, இவர்களை அழித்தொழிப்பதற்கு மக்கள் எமக்குப் பக்கபலமாக அமைவர் என்பது திண்ணம்.

**சமூக விரோதிகளை அழிப்போம்!**

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்!

**பிரித்தானியக் கிளையினரின் வெளியீடு**

தமிழீழ விடுதலைப் புலிகள்
# Liberation Tigers of Tamil Eelam
(UK Branch) (பிரித்தானியக் கிளை)

Madras,
30 April 1986.

000189

PRESS STATEMENT

It is with great sense of sorrow that we wish to inform that there has been a major clash between the Liberation Tigers of Tamil Eelam (LTTE) and the Tamil Eelam Liberation Organisation (TELO) in Jaffna. Armed confrontation broke out following the kidnaping of two leading members of the LTTE and the murder of one of our senior commanders Capt. Lingam by the TELO. The LTTE guerrilla formation were compelled to take punitive action by raiding TELO bases in Jaffna peninsula to rescue the kidnaped members and in that process several TELO guerrillas have been killed and arms and ammunitions captured.

The quarrel started when the armed TELO members attacked the public in Jaffna for observing hartal in memory of an LTTE field commander Major Aruna who was killed in a sea battle with the Sri Lankan navy on Friday. The TELO members irritated by the overwhelming support given by the people of Jaffna to the LTTE, attacked the civilians blaming them for not commemorating their dead fighters. When two senior members of the LTTE intervened to protect the public, they were manhandled and abducted. There after one of the senior commanders of the LTTE approached TELO leaders to seek the release of the kidnaped members. The TELO responded by shooting the LTTE commander dead.

This unprovoked murder and abduction forced the Tigers to take armed action to secure the release of our senior members. LTTE guerrillas raided several TELO bases and in the clashes several TELO guerrillas were killed and a large number surrendered with their weapons. One of our fighters was killed.

The LTTE is deeply grieved over the unfortunate insident presipitated by the irresponsible and indiciplined conduct of the TELO.

POLITICAL COMMITTEE,
LIBERATION TIGERS OF TAMIL EELAM.
(This Statement is re-issued in London)

LTTE (UK Branch)
BM BOX 5973
LONDON WC1N 3XX

# தமிழீழத்தில் தமிழீழ விடுதலை இயக்கத்தினரால்

## மேற்கொள்ளப்பட்ட மக்கள் விரோத நடவடிக்கைகள்.

TELO இனரால் மேற்கொள்ளப்பட்ட சமூக விரோதச் செயல்களில் சிலவற்றை மட்டும் உரிய விளக்கங்களுடன் கீழே தருகின்றோம்.

EPRLF, PLOT இனரின் சமூகவிரோதச் செயல்கள் எமது அடுத்த வெளியீட்டில் இடம்பெறும்.

29.6.85:- ரெலோ இயக்கத்தினர் விடத்தல் தீவில் நடைபெற்ற ஒரு பாட்டுப் பிரச்சனையில் இவ்வியக்கப் பொறுப்பாளர் சேகர் என்பவரின் அண்ணன் கொலை செய்யப்பட்டதால் எம்.யோசப் என்பவரை சுட்டுக்கொன்றதுடன் அவரது இரு பிள்ளைகளுக் கையிலும், காலிலும் சுட்டுள்ளனர்.

3.7.85:- வட்டக்கட்டல் என்னும் இடத்தில் உள்ள மூசா என்பவரது கடையில் உள்ள பொருட்கள் இவர்களால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன அவற்றின் விபரம் வருமாறு-

உடுப்பு வகைகள்.

| | | | |
|---|---|---|---|
| 1. அமெரிக்கன் ஜோஜற் | 3 சாறிகள் | 24. வெள்ளைத் துணி | 80/20 |
| 2. சிந்தற்றிக் | 9 " " | 25. பட்டர் நைலோன் | 1 பீஸ் |
| 3. இந்தியா வோயில் | 4 " " | 26. சேட் வகைகள் | 15-20 |
| 4. சிலோன் வோயில் | 3 " " | 27. அரிதாஸ் பெனியன் | 20-25 |
| 5. சிலோன் வூளி | 2 " " | 28. காற்சட்டை | 10-15 |
| 6. ஹற்வைல் | 3 " " | 29. கிறவர் சேட், கா. | 40-45 |
| 7. கைத்தறி | 2 " " | 30. றிய பெனியன்கள் | 10-15 |
| 8. சிலோன் | 1 " " | 31. ரீ சேட் | 20-25 |
| 9. கவுன் வகைகள் 20-25 | | 32. சிறிய கவுன் | 15-20 |
| 10. சீத்தை | 2 கலர் | 33. வெள்ளை பெனியன் | 08 |
| 11. பப்பிளின் பீஸ் | 9 " " | 34. இந்தியன் யானை மார்க் | 22 பற்றிக் |
| 12. சீத்தை பீஸ் | 9 " " | 35. இந்தியன் பூவாளி மார்க் | 12 பற்றிக் |
| 13. பொலிஸ்டர் | 2 " " | 36. இந்தியன் வெள்ளை | 08 சாரம் |
| 14. டியூறே | 3 " " | 37. மட்டக்களப்பு | 25-30 சாரம் |
| 15. சேட் துணி | 4 " " | 38. சிறிய | 15-20 சாரம் |
| 16. ஜப்பான் பொலிஸ்டர் | 5 " " | 49. பொலிஸ்டர் | 15-18 சாரம் |
| 17. சற்றின் பொலிஸ்டர் | 5 " " | 40. துவாய்கள் | 02 |
| 18. பெல்ஸ் துணி | 5 " " | 41. பெண்கள் பெனியன் | 10 |
| 19. தாவணி | 4 " " | 42. பெண்கள் லேஞ்சி | 10 |
| 20. பொலிஸ்டர் புள்ளி | 4 " " | 43. கை லேஞ்சிகள் | 15 |
| 21. குருபானி துணி | 3 " " | 44. தலையணை உறைகள் | 10 |
| 22. அமெரிக்கன் ஜோஜற் | 2 " " | 45. சிங்கப்பூர் ஜட்டிகள் | 12 |
| 23. வெள்ளைப் பப்ளின் பீஸ் | 1 - - | 46. பிறசியர்கள் | 02 |

பணம், நகை.

1. கவர் கூட்டில் வைத்திருந்த 5,000 ரூபா
2. செப்புக்குள் வைத்திருந்த 550 " "
3. லாச்சியிலும் வைத்திருந்த 450 " "
4. 1 சங்கிலி 2 பவுண்
5. 1 சிற்றிசன் மணிக்கூடு

## துவிச்சக்கரவண்டிச் சாமான்கள்.

1.முன் போக்கு - 2
2.முன்,பின் றிம்கள் - 7
3.ரயர்கள் - 13
4.ரியூப் - 10
5.கான்றில் - 3
6.கான்றில் ஊசி - 6
7.செயின் - 4
8.மக்காட் - 2
9.கான்றில் லீவர் - 6
10.ஏசியா சீற் - 3
11.சைக்கிள் கம்பி- 2 பெட்டி.
12.ஏசியா பெடல்- 6
13.பின்,முன் குடம்- 6
14.கெற்,டைனமோ- 2
15.பிறேக் கட்டை - 1 பெட்டி
16.நடுக்கின்னி - 1 பெட்டி
17.பின் குமுழ் - 1 பெட்டி

## இதர பொருட்கள்

1.மேசைக்கத்தி = 1
2.பிறிஸ்டல் பண்டல் - 1½
3.வண்டர் லைற் பெரியது-20 கட்டி
4.வண்டர் லைற் சிறியத் -25 கட்டி
5. லவ்வோம் சோப் -12
6.ஸ்னோவைற் சோப் -24
7.நீல சோப் -36
8.சன் லைற் சோப் -14
9.றெக்சோனு சோப் -11
10.ராணி சோப் - 5
11.கோம்பா சோப் - 4
12.பேபி சோப் - 5
13.லக்ஸ் சோப் -12
14.பற்றரி 1½ பெட்டி
15.பார் சோப் 5½
16.ஒறேஞ் பைக்கட் 15
17.சிக்னல்,எல்.ஆர்." " 1
18.ஆர்.வி.ஜி.பிடி பண்டல் 2
19.தீப்பெட்டி டசின் 18
20.சுடுதண்ணீர் போச்சி 4
21.3/3.பெரிய டோச் -
22.5/2.சிறிய டோச் -
23.விலையுயர்ந்த பவுடர் -13
24.பெரிய மீன் ரின்கள் -14
25.சிறிய மீன் ரின்கள் -10
26.மோல்ரிஸ் போத்தல் - 1
27.கொல்டோபோத்தல் - 1
28.கற்கண்டு போத்தல் - 1
29.மலிபன் பிஸ்கட் போ,- 1
30.லக்டோஜன் பைக்கட் - 2
31.நெஸ்பிறே பைக்கட் - 3
32.நெஸ்டோமோல்ட் பை, 3
33.புரூட்டினெக்ஸ் போத், 2
34.நெஸ்டோமோல்ட் - 4
35.ஜாம் போத்தல் - 8
36.மோல்டோவா சிறி,போ3
37.வீவா சிறிய போத்தல்- 3
38.கார்லிக்ஸ் போத்தல்- 4
39.பேபி ஒடிக்கொலன் போ2

21.08.85:-மருக்கோவில் குருவானவருடைய ஜீப் வண்டியை பலவந்தமாக கடத்த முற்பட்டனர்.

23.08.85:-மன்னார் பகுதியில் கப்பமரக்காயர் என்பவரிடமிருந்து 12.000 ரூபா பணம் இவர்களால் கொள்ளையடிக்கப்பட்டது.

17.10.85:-மருக்கோவில் குருவானவரது ஜீப்வண்டியை மீண்டும் பலவந்தமாக கடத்த முற்பட்டபோது எம்மவர்கள் தலையிட்டுத் தடுத்தனர்.

25-05.10.85:-இக்காலப்பகுதியில் சாமுவேல்ஸ் நீர்பாசன இலாகாவுக்குச் சொந்தமான வான் ஒன்று இவர்களால் கடத்தப்பட்டது.

12,12.85:-மாவிலங்கேனி என்ற இடத்தில் உழவு இயந்திரம் ஒன்று இவர்களால் கடத்தப்பட்டது.

14-21.12.85:-இக்காலப்பகுதியில் நாச்சிக்குடாவைச் சேர்ந்த இஸ்லாமியர் ஒருவரின் வாகனம் ஒன்று அரிசி மாவுடன் கடத்தப்பட்டது.

01.01.86:-புளகரிப்பகுதியில் வைத்து உழவு இயந்திரம் ஒன்று இவ்வியக்கத்தினரால் கடத்தப்பட்டது.

1.வைகாசி மாதம் வவுனியா,மன்னார் வீதியில் உள்ள 7ம் கட்டையில் வைத்து சண்முகம் என்பவரது லொறி மறிக்கப்பட்டு 25,000 ரூபா கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

2)இதே தினம் மன்னாரைச் சேர்ந்த சௌந்தரநாயகம் என்பவரது சீமெந்து லொறி மறிக்கப்பட்டு 40,000 ரூபா கொள்ளையிடப்பட்டது பின் எமது தலையீட்டால் 29,500 ரூபா திருப்பிக் கொடுக்கப்பட்டது.

3)ஆனிமாதம் செட்டிக்குளம்,மன்னார் வீதியில் வைத்து (டொபி)இனிப்பு வியாபாரம் செய்பவரிடமிருந்து ஈ.எல்.எவ்.வான்,இனிப்புகள்,பணம் 30.000 ரூபா காசோலைகள் ஆகியன கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

4)ஆனிமாதம் வவுனியாவைச் சேர்ந்த டாக்டர் ராசதுரை என்பவரின் வான்(ஈ.எல்.எவ்) கடத்தப்பட்டது.இதுவரை கொடுக்கப்படவில்லை.

5)ஆனிமாதம் பாவற்குளத்தில் உள்ள அரகத்துல்லா என்னும் வியாபாரியின் ஜெனரெட்டர் கொள்ளையிடப்பட்டுள்ளது.

6)ஆனிமாதம் செட்டிக்குளத்தைச் சேர்ந்த மில் முதலாளி சண்முகத்திடமிருந்து 260 உழுந்து மூடைகள் கொள்ளையிடப்பட்டன.

7)வவுனியா மாவட்டத்தில் உள்ள சின்னக்குளம் என்ற இடத்தைச் சேர்ந்த செல்லத்துரை என்பவருக்குச் சொந்தமான சி.சி.125 மோட்டார் சைக்கிள் ஒன்று கொள்ளையிடப் பட்டது.

8)வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த பட்டானிச் சோலை என்னும் இடத்தில் உள்ள அப்துல் ஜமால் என்பவருக்குச் சொந்தமான மோட்டார் சைக்கிள் ஒன்று கடத்தப்பட்டது.

9)வவுனியா வன பரிபாலன உத்தியோகஸ்தரான சிற்றம்பலம் என்பவரது கார் கடத்தப் பட்டது.

10)வவுனியா கண்டி வீதியிலுள்ள ஹாக்கான் மோட்டார் கடையில் உள்ள வான் கடத்தப்பட்டது.

11)செட்டிக்குளம் திருநாவுக்கரசு என்பவரின் வான் கடத்தப்பட்டது.

12)நடராசா என்பவரின் உழவு இயந்திரம் கொள்ளையிடப்பட்டது.

13)19.01.85 இல் புளியங்குளத்தில் மூன்று வீடுகளில் கொள்ளையடித்துவிட்டு நான்காவது வீட்டில் கொள்ளையடிக்க முயன்றபோது மக்கள் இவர்களைப் பிடித்து ஊர்வலமாக அழைத்துச் சென்றனர்.வழியில் ரெலோவின் மற்றைய உறுப்பினர்கள் வந்து பலவந்தமாக மீட்டுச் சென்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள்
**Liberation Tigers of Tamil Eelam**
(UK Branch) (பிரித்தானியக் கிளை)

Madras,
4th May 1986.

000539

PRESS STATEMENT
****************

The Liberation Tigers of Tamil Eelam (LTTE) deny any involvement in the bomb blast of the Air Lanka plane, at Katunayake Airport, we consider this an act of pure terrorism aimed to kill innocent civilians which deserve outright condemnation.

Sri Lanka National Security Minister Mr. Lalith Athulath Muthali's statement,that he had intercepted a wireless message from Madras alleging our involvement in the bomb blast is a malicious distortion of truth, fabricated by the Sri Lankan Government to undermine the image of our movement and to portray us as a terrorist organisation.

Our liberation struggle is against the Sri Lankan State and its apparatus of terror, the Armed Forces but not against the civilians whether they are Sri Lankan or foreigners.

Sri Lanka's intention is to drive a wedge between LTTE and the Government of India by portraying us as exteremists opposed to a political solution and therefore Sri Lanka advances a theory that LTTE has done this operation to undermine the peace mission of the Indian delegation.

We wish to say that LTTE favours a political solution that should guarantee the freedom and dignity of our people and therefore we fully support India's gunuine effort to bring about a political settlement through peaceful negotiation.

POLITICAL COMMITTEE,
LIBERATION TIGERS OF TAMIL EELAM.
(This statement is re-issued in London)

# LTTE'S TALLY

**The Liberation Tigers of Tamil Eelam (LTTE) claims that it has killed 496 Sri Lankan security personnel in the first four months this year.**

**It lost 54 militants in the same period.**

**The LTTE's press release states that its fighters shot down or damaged 7 helicopters.**

**A plane and a patrol boat were damaged.**

**A patrol boat and 18 military vehicles were completely destroyed.**

*BOMBING OF LIBYA*

# AMERICA'S INTERNATIONAL TERRORISM

26th April 1986

Saturday Review

**This is the text of a statement (dated 17th April) handed over by Muslim Organisations in Jaffna to the Govt. Agent, Jaffna, for transmission to President Jayewardene:**

We the Muslims of Jaffna consider the recent air attacks on the Libyan cities of Tripoli and Benghazi by American fighter-bombers as the culmination of the international terrorism of America and its closest ally Israel. Several planes operating from bases in Britain have attacked civilian targets including foreign Embassy buildings.

Several women and innocent children are among the casualties and many others were injured.

The Muslim Organisations in Jaffna have organised a demonstration and Hartal today (17-04-1986) in protest against the unwanted atrocities committed by the American imperialistic Government against the Muslims of Libya. We feel that the Americans consider Libya as an obstacle against its imperialistic designs in the oil rich Arab states.

We regret that the Sri Lankan Government has not expressed its condemnation of the high-handed acts of the Reagan administration.

We request the Sri Lankan Government to reflect the feelings of the Muslims of Sri Lanka as well as that of the other peace loving citizens of this country in this matter.

We desire that the Sri Lankan Government should express its solidarity with the Libyan people and their leader Colonel Muammar Gaddafi in safeguarding its independence, sovereignty and territorial integrity. We request the Government of Sri Lanka to urge the United States Government to respect world opinion and to desist from any further attacks on Libyan territory.

## SELVASANNITHY & RUPAVAHINI

Sri Lanka's State TV Rupavahini announced on Sunday night (20th April) that devotees could freely worship at Selvasannithy Temple—an indirect reference to our story the previous day (SR, 19th April).

On Monday morning, the temple chariot was set on fire by Security personnel and the temple area turned into a battleground.

Rupavahini predictably reported that 'terrorists' had burnt the temple chariot!

Early on Monday morning there was a fierce 2- hour shoot-out between Liberation Tiger militants and security personnel who had moved out of the army camp sited opposite the Temple. Seven soldiers were killed.

Reprisals led to the killing of 3 people, including the priest of the temple.

In the evening, a bomber dropped 14 bombs on the temple complex and helicopters strafed the houses surrounding the temple.

A fact-finding team which included the Govt. Agent, Jaffna, visited the temple on Wednesday.

The team found two charred skeletons(one that of a female) at the site.

The 40-foot chariot, worth Rs. 4·5 million, has been burnt to ashes. The 2½ ton temple bell, worth Rs. 1·5 million, is in smithereens. The temple complex too has been badly damaged

Mr. Chelliah Rajadurai continues to be the Minister for Hindu Religious Affairs.

## LANDMINE DEATHS

Twenty three Air Force personnel were killed in a powerful landmine blast at Morawewa, Trincomalee, last Friday, according to the Liberation Tigers of Tamil Eelam (LTTE).

The Government reported that only nine Air Force personnel, including 3 corporals, were killed in the ambush.

In another blast in Pottuvil, a sub Inspector of Police travelling in a jeep was killed.

## HOSPITALISED

Fifteen soldiers were admitted to Valaichenai Hospital after a direct confronation between commandos and militants at Pulipaynthakal (literally, Tiger's Leap).

## KILLED

Five soldiers and two militants were killed in a direct confrontation at Point Pedro last Sunday.


## DAMAGED

Two hotels in the grand Bazaar area and a tourist hotel close to the Jaffna Fort were damaged when shells were fired from the Jaffna Fort on Friday night (18th April)

## OFFICE BURNT

Students' birth certificates and other valuable documents were burnt when the office of the Pooneryn Vidyalayam—about 100 yards away from the Army Camp—was set on fire by unknown persons.

# விடிவிற்கு முந்திய மரணங்கள்



உங்களுடன் .....

தம் உயிர் ஈந்து இம் மண்ணிலே விடுதலைப் பயிரை உரம்பெறச் செய்து விட்ட தியாகிகளை நாம் என்றும் மறக்க முடியாது மறந்தால் நாம் மனிதம் அற்றவர்களாகின்றோம்.

எம் தோழர்கள் -- நாம் எப்போதும் ஒரே குடும்பமாக வாழ்பவர்கள். இனிய உறவுகளை துறந்த நாம், எம்மை நேசித்து நம்மோடு நாமே ஐக்கியமாகி இறுகப் பிணைந்து விட்ட ஜீவன்கள். நமக்கு நாமே தாயாகி, தந்தையாகி, இனிய உறவாகி, இணைந்திருக்கின்றோம்.

எமக்கிடையே ஏற்படும் இழப்புக்கள் -- எமக்கு மிக நெருக்கமானவர்கள் நிரந்தரமாகவே பிரிந்து விடும்போது, எம்மோடு ஒன்றாக, எம்மிலே ஒன்றாக, அவர்களின் பிரிவுகள் எம்மை நிலைகுலையச் செய்கின்றன. அந்நிலையை நினைத்து நாம் அழுவதில்லைதான் அழமுடியாதுதான். ஆனால் நாம் அடையும் வேதனை சொல்லமுடியாதது. சொன்னாலும் யாராலும் புரிந்துகொள்ள முடியாதது.

புரட்சிக் காரர்கள் என்றால் கடினமானவர்கள் என்று எண்ணும் இந்த உலகம் மனிதர்களுள்ளே மிகவும் மென்மையானவன் மிருதுவான உணர்வுகளைக் கொண்டவன் அதனால்தான் புரட்சிக்கே புறப்பட்டவன் என்பதை உணரவில்லை. அந்த மென்மையான இனிய உள்ளங்களோடு நாம் உறவாட வாழ இன்னுமொரு பிறவி கிடைக்காதா என்று ஏங்குகின்ற ஏக்கங்கள் யாருக்கும் புரியாமலிருக்கலாம். ஆனால் எம்மைச் சார்ந்தவர்களால் நிச்சயம் புரிந்துகொள்ள முடியும்

அந்த தியாகிகள் கடந்துவந்த பாதை கடினமானதுதான். அந்தக் கடினங்களை எம்மோடு இறுதிவரை பகிர்ந்து வந்த எம் இனியவர்கள் இடையிலே உதிர்ந்து விடும்போது எம் தாயை இழந்த துயர், எம் தந்தையை இழந்த துயர், எம் இனிய உறவுகளை இழந்த துயர், இவைகளையும் கடந்த துயர் உண்டு என்றால் அவற்றையும் கடந்த துயரடையும் எம்நிலை யாருக்கும் புரியா.

ஒருவனைப் பிரியும் போதே இந்நிலை எழும் போது பதினாறு உயிர்களையும் ஒரே சமயத்தில் ஒரே தாக்குதலில் பலி கொடுத்த எம் நிலையை எந்த வெற்றியும் எந்தச் சந்தோஷமும் சீரமைத்து விடமுடியாது.

தம் இனிய கனவுகளை இம் மண்ணிலே புதைத்து விட்டு இந்த மண்ணின் விடுதலைக் காகப் புறப்பட்ட அந்தப் பதினாறு ஆருயிர்களை இந்த மண் மறந்து விடக்கூடாது. அவர்களின் ஆத்மாவின் கீதங்கள் இன்றும் எம் உள்ளங்களில் ஒலித்துக் கொண்டிருப்பதை இம் மண்ணின் மைந்தர்களோடு பகிர்ந்து கொள்கிறோம்.

---

# 1

மனித முகங்களே காணமுடியாத காடு, காட்டை ஊடறுத்துச் செல்லும் ஆற்றின் இரு கரையும் செழித்திருந்த மரங்கள் எம்மை வரவேற்கின்றன. காட்டில் பூக்கும் ஒவ்வோர் பூவும் எம்முடன் பேசுகின்றன. அங்கே வீசும் தென்றல்; அங்கு பாடித்திரியும் பறவைகள்; ஓயாமல் ரீங்காரமிடும் வண்டுகள் இவை தான் எமது சொந்தங்கள். இந்த வகையில்தான் அந்தக் காடு ஒவ்வொரு கெரில்லாவாலும் நேசிக்கப்படும் தாயாகி விட்டாள்!

அன்றும் வழமைபோல் காட்டில் குளிர்மை இருந்தது; எமது வீரர்கள் அணிவகுத்து நின்றனர். இராணுவ முகாமை அண்மிக்க பல மைல்கள் செல்ல வேண்டியிருந்தது. எல்லோரும் ட்றக்ரரில் ஏறினர். ட்றக்ரர்கள் இரைச்சலை எழுப்பிக்கொண்டு காட்டுப்பாதைகள் ஊடாக வேகமாக ஓடுகின்றன. பாதைகள் சீரில்லை: பெரிய மரவேர்கள் பாதைக்குக் குறுக்கே கிடந்தன. குன்றுகளும், குழிகளும் பார்க்கின்ற இடமெல்லாம் தெரிகின்றன.

"தடாம்" "தொம்" என்ற சத்தம் பலமாக கேட்டுக் கொண்டு இருக்கிறது.; சேறும் சகதியுமான பாதை: சேற்றினுள் சில்லுகள் புதைந்து சேற்றை அள்ளி வீசுகின்றன. ட்றக்ரர்களில் இருந்த தோழர்களின் ஆடைகளில் சேறு படிந்தது;

"மாமா என்ன சேறடிக்குது?" என்றான் சைமன்,

"ஓம் அம்மான் அது அப்படித்தான்" என்றான் மாமா

பெட்டிக்குள் இருந்து சிரித்துக் கொண்டு சைமன்

"மாமா பகிடி விடாம வடிவா ஓடு இல்லையேல் கல்லுகள் தான் வரும்" என்றான்.

"[illegible] பார்ப்பம் என்பது போல் மேலும் வேகமாக ஓடுகின்றான்.

"[illegible] சண்டையிட்டுக் கொண்டால் எங்களு[illegible] போகும்" என்றான் பழசு.

ட்றக்ரர்கள் வேகமாக ஓடிக்கொண்டிருக்கின்றன. வேதாவின் ட்றக்ரர் சேற்றில் புதைந்து விட்டது. எந்தப் புதைகுழியில் இருந்தும் எடுத்துவிடும் திறமை அவனிடம் இருந்தது. எல்லோரும் உதவி புரிந்தும் முடியவில்லை; சிறிய இருத்தல் படிக்கல்லை எடுத்து வந்தான் வேதா.

"உம் நிறுத்தப் போறான் பாருங்க" என்றான் சைமன்;

"[illegible] போடாப்பா சைமன்" என்றவன் ஒரு முன் [illegible] நிலத்தில் முட்டாகவைத்து படிக்கல்லை கொடுத்து [illegible] ஒரு இழுவைதான் ஏறிக் கொண்டு ட்றக்ரர் வந்து நிற்கின்றது. வேதா இலேசாக ஒரு சிரிப்பு சிரித்தான்.

ட்றக்ரர் ஓட்டுவதில் மாமாவிடம் ஒரு தனி இயல்பு உண்டு. ஒரு பக்கம் உயரம் மற்றக்கரை சரியான பள்ளம் ஓடி வரும்போது தான் தெரியப்படுகின்றது. புரண்டு போச்சோ என்று எல்லோரும் ஒரு கணம் நினைத் [illegible] அழுத்தினான். சிறு மரச் செடிகளை முறித்து நிலைகுலையும் திரும்பி ஒரு பார்வை; தாங்கள் [illegible] புரளவிடாமல் எடுத்திறான் என்று புழுகு.

"எப்படி அம்மான் ஓட்டம்?" என்றான் மாமா.......

"நல்லாயிருக்கு [illegible] இதுலேய முடிச்சிப்பார்த்திற" என்றான் கெனடி.

"இறங்கு நீ சும்மாயிரு" என்றான் வேதா;-

இருவரும் சண்டையிட்டுக் கொள்கின்றனர்.

ட்றக்ரர்கள் மீண்டும் ஓடத் தொடங்குகின்றனர்.

இருபக்கமும் நின்றிருந்த மரக்கிளைகளை உரசின: முட்கள் உடலைக் கீறின. பள்ளம் ஒன்றில் சில்லுகள் விழுந்து பெட்டிக்குள் இருந்தவர்களை தூக்கி குத்தியது. குலுக்கியதில் இருந்து மீளுவதற்கு முன் அடுத்த பள்ளம் மாறி மாறி உடலை நோதல்படுத்தியது. எனினும் இப்பிரச்சனைகள் ஊடாகவும் இலட்சிய முனைப்போடு தான் இயங்கினோம்.

நெஞ்சில் நிறைந்திருந்த மண்ணின் நினைவுகள் நீண்ட பயணத் தொடரின் வேதனையை அப்போது உறுத்தவில்லை; காட்டுப் பாதையூடாக ஓடிக்கொண்டிருந்த ட்றக்ரர்கள் ஆற்றைக் கடக்கவேண்டியிருந்தது. ஆற்றுக்குள்ளே புதையலாம்; இறங்கி நடந்தால் தனியே ட்றக்ரரை எடுக்கலாம்..என்று பேசிக் கொள்கின்றனர். மாலை நான்கு மணிக்கு ஆரம்பமான பிரயாணம் இன்னும் முடியவில்லை "இரவு நேரத்தில் அதுவும் குளிரில் தண்ணிக்குள் இறங்கி நடக்கிறதென்டால்"......— என இழுத்தான் கெனடி. எல்லோரும் ட்றக்ரர்களில் இருந்து இறங்கி ஆற்றினுள் இறங்கினர்.

காதுகள் ஊடாக காற்று சில் என்று குளிர்ந்தது:

முழங்காலுக்குச் சற்று மேலே மடித்து விடப்பட்ட பச்சை நிற உருமறைப்பு ஆடைகள், மூன்றுகச் சேர்த்துக்கட்டிய சப்பாத்துக்கள் இரண்டும் ஒரு கையில்; ஒவ்வொருவர் தோள்களிலும் பைகள்; மறுகையில் ஆயுதங்கள்; இந்நிலையில் சேற்றினுள் புதைகின்ற கால்களை இழுத்து இழுத்து தூக்கி நடந்து கொண்டிருக்கின்றனர். தண்ணீர் மட்டம் இடுப்பளவையும் தாண்டி வயிற்றையும் நனைத்தது. சிலர் தடுமாறி விழுந்து விட சரிந்தபோது மற்ற நண்பர்கள் அவர்களை அணைத்து நிலைப்படுத்திக் கொண்டு ஆற்றைக் கடந்து விடுகின்றனர். நீளமான உருமறைப்பு ஆடைகளில் இருந்து நீர் சிந்திக் கொண்டிருந்தது: இரண்டு ட்றக்ரர் தோழர்களை மறுகரையில் ஏற்றத் தயாராய் நின்று கொண்டிருந்தன.

வேதா தோழர்களை திரும்பிப் பார்க்கிறான்.

என்னம்மான் வேதா! இறங்க வேணுமோடா? எனத் தோழர்கள் வேதாவைக் கேட்கின்றனர் அதற்கு அவன் இல்லையம்மான் இருங்கோ என்றான். ட்றக்ரர் ஆற்றினுள் இறங்கியது: பெரிய சில்லுகள் நீரை அள்ளி தோழர்கள் மீது வீசுகின்றன: பெட்டிக்குள் இருந்தவர்கள் நனைகின்றனர். குளிரையும் ஊடறுத்து ட்றக்ரர் உருண்டு கொண்டிருக்கின்றது. மாமாவின் ட்றக்ரரும் பின்னே வந்து கொண்டிருக்கின்றது. லைற் வெளிச்சம் நீரில் பட்டு மரங்களில் தெறித்திருந்தது. காத்தானின் ட்றக்ரரும் ஆற்றில் இறங்கத் தயாராக வந்து நிற்கின்றது, ஒளி வெள்ளத்தில் அந்தப் பகுதி மிதந்தது:

வேதாவும் மாமாவும் அதிசிறந்த வாகனச்சாரதிகள். இவர்கள் ஓடும்போது தனி விமர்சனம் எழும் ஒட்டிசுட்டான் பொலிஸ்நிலையத் தாக்குதலை முடித்து விட்டு வீடுகளைக் கிழித்து ஓடிய ஓட்டம் தான் நினைவில் வரும்; இவர்களால் பயிற்றப்பட்ட சாரதிகள் எத்தனை பேர்;.......! "ட்றக்ரர் புதைந்து விட்டது" என்று காத்தானின் செய்தியை வேதாவின் வோக்கி ரோக்கி அலறியது: வேதா ஆற்றுள் இறங்கிச் செல்கிறான். ட்றக்ரர் கரை வந்து சேர்கிறது. ஆபத்தானதும் துயரம் மிக்கதுமான பாதைகள் ஊடாக பிரயாணம்: எல்லோரிடமும் மௌனம் சூழ்ந்திருக்கின்றது. யாருக்கும் பேச்சு வரவில்லை சீரியஸாகி இருக்கின்றனர்.

நீரால் நனைந்த உடைகளைப் பிழிந்து உதறிக் கொண்டு சைமனும் ஜெகனும் ஏதோ பேசிப் பலமாகச் சிரித்துக் கொள்வது கேட்கின்றது: அந்தச் சிரிப்பு எல்லோரது மௌனத்தையும் குதறிக் கொண்டெழுந்தது.

"எலரும் மாறிப்போச்சு" என்று ஜெகன் கெனடியோடு பகிடி விட்டதனால் தான் அந்தச் சிரிப்பு: அவனின் அந்தக் குறும்புத்தனம் எல்லோரையும் சிரிக்க வைத்துவிடும் தோழர்கள் மீது பயங்கரமாக அன்பைச் செலுத்தும் அவன் தோழர்கள் அந்த இருளில் நனைந்து பேசாமல் நிற்பதால் அவ்வாறு சொல்லியிருக்க வேண்டும்.

ஒரு நாள் பலத்த மழை பெய்தது. எமது கூடாரங்களை ஊடாக நீரடித்து ஓடிக்கொண்டிருந்தது. சடுதியாக ஏற்பாடு செய்திருந்த அமைவிடம்; அவ்வளவு நன்றாக இருக்கவில்லை, இதனால் மரங்களுக்குக் கீழே ஒதுங்கிக் கொண்டும் பரண்களில் ஏறி முகங்களை முழங்காலில் வைத்துக் கொண்டும் நடுங்கியவாறும் இருந்த தோழர்களை நோட்டமிட்டவாறு அவன் நின்றுகொண்டிருக்கிறான் மதிய உணவுத் தயாரிப்பில் ஈடுபடமுடியாதவாறு அடுப்பில் நீர் நிறைந்து கிடக்கின்றது. விறகுகளும் நனைந்து விட்டன. தேநீர்கூட அருந்த முடியாது. பசிக்களை ஒருபுறம். சனியன் பிடிச்ச மழை இந்த நேரத்திலையா பெய்யவேணும்' என நினைத்துக்கொண்டு தோழர்கள் பேசாதிருந்தனர். அந்த நேரத்தில் ஏதாவது கதை செய்வான். ஜெகன் கதை சொல்கிறான் என்றாலே ஒரே சிரிப்புத்தான். துயரம் சூழ்ந்த நாட்களில் இருந்து மீட்டு எழுந்து சந்தோஷங்களை ஊட்டும் திறன் அவனுக்குரியதே……

# 2

காட்டுப்பாதையூடாக மரங்களையும் செடிகொடிகளையும் விலக்கிக் கொண்டு ட்றக்ரர் ஓடிக்கொண்டிருக்கிறது. இருண்ட காடு, சாமம் ஆகிவிட்டிருந்தது. பற்றைகளை முறித்துச் சல சல………… என்றசத்தம் கேட்டது. சத்தம் வந்த திசையை நோக்கி எம் பதினாறு தானியங்கித் துப்பாக்கியை சடுதியாகத் தயார் நிலைக்கு மயூரன் எடுத்திருந்தான். மயூரனை வேதா அழைத்தான். ,,அவதானமாகப் பார்,, என மயூரனிடம் பணிக்கிறான்" மயூரன் சிறந்த பார்வை சக்தியுள்ளவன். ',முள்ளம்பன்றிகள் ஓடுகின்றன,, என்று கூறிவிட்டு தனபாலோடு பேசிக் கொண்டிருக்கின்றான்.

மயூரன் சிறந்த போர்ப்பயிற்சி எடுத்திருந்தான். மனதை ஒரு நிலைப்படுத்தி குறியை எய்வதில் அவனிடமிருந்த திறமை எம்மை வியக்கவே செய்யும். அந்தச் சிறு வயதில் யாரும் பெறுவதே இயலாது. மாலை நேரங்களில் பயிற்சிக்காக கொடுக்கப்பட்டிருந்த AIR GUN துப்பாக்கியை தூக்கிக் கொண்டு திரியும் அழகே அழகு!

பறந்து கொண்டிருக்கும் காக்கா குருவிகளை இலக்கு வைப்பதில்தான் அவனுக்கு பிரியம். ஒரு முறை காகம் ஒன்று மேலே பறந்து கொண்டிருந்தது. அதன் இறக்கைகளை அகல விரித்து விமானம் இறங்குவதுபோல் நிலத்தை நோக்கி பறந்து கொள்வதும் திடீரென மேலெழுவதுமாக இருந்தது. இந்த நேரத்தில் அவனது இலக்கு விரைவாக வைக்கப்படுகிறது. காகம் மணலில் இறக்கை விரித்து துடித்துக்கொண்டு கீழே விழுந்தது. இவ்வாறு பயிற்சி முகாமிலே அவனிடம் காணப்பட்ட திறமைகள் சொல்லியடங்காது. களங்கள் அவனது திறமையைப் பன்மடங்கு வளர்த்தது.

சமையல் வேலைகளாயினும் சரி எந்த வேலைகளையும் திறம்பட செய்து முடிப்பான். துடியாட்டம் மிக்க அவனது தோற்றம், தெளிந்த சிரிப்பும் நெஞ்சில் இன்றும் நிறைகின்றன.

மயூரன் வயதில் இளையவனாக இருப்பதால் அவனை எல்லோருமே தம்பி என்றே அழைப்பர்.

பட்சிகளின் கீதங்களும் யானைகளின் பிளிறல்களும் நரியின் ஊளைச்சத்தங்கள் போன்றவையும் கானகத்தின் இன்னிசை நிகழ்வுகள். காத்தானின் ட்றக்ரர் வெளிச்சம் மரங்களைத் தழுவிச் சென்று கொண்டிருக்கிறது:

நடுக்காடு.

மனிதசஞ்சாரமற்ற பிரதேச எல்லையைக் கடந்து சென்று கொண்டிருக்கின்றது. பின்னால் எழுந்திருந்த தூசுமண்டலங்கள் ஊடாக ட்றக்ரர் வெளிச்சங்கள் தெரிந்தன. பாதையின் நடுவே பெரிய பள்ளம் இருந்தது. நிறுத்தி உடலை அசைத்து ஸ்ரேறிங்கை வெட்டித் திருப்பி எடுத்துக்கொண்டிருக்கிறான். காத்தானின் நினைவின் நரம்புகள் பமர் என்று ஒலித்தது. அவனது எண்ணங்களில் சூழ்ந்த நிலையை அறவே மறக்க முயல்கிறான். ஆனால் அவனால் முடியவில்லை. அவனின் காதலி 'ட்றக்ரர் இரைச்சல் கேட்கும் போது நீங்கள் போவதாக நினைத்துக் கொள்கிறேன் என்ற அவளின் வார்த்தைகள் அவளின் பரிதவிப்பை ஒரு கணம் அவனில் நிலைக்க வைத்து விடுகின்றன. 'பாவம் அவள்; நான் இறந்து விட்டாலும்' என்ற அவன் கவலை கொள்கிறான். ட்றக்ரர் இரைச்சல் சதா தெருவில் கேட்கும் போதும் அவள் அடையும் வேதனையை எண்ணிக்கூடப் பார்க்க முடியாத அவனின் அந்தக் கணங்கள் துடியாய் துடித்தன.

''காத்தான்……காத்தான் . நான் வேதா பேசுகிறேன்'' எனக் கூறிவிட்டு பதிலுக்காக காத்துநின்றான். ''வேதா நீங்கள் பேசுவது தெளிவாக கேட்கிறது,'' என்றான் காத்தான். இவ்வாறு இருவரும் பேசிக்கொண்டிருக்கின்றனர்.

நல்லதும் பாதுகாப்பானதுமான ஓரிடமாக ட்றக்ரரை நிறுத்தும்படி'' வோக்கி ரோக்கி ஒலிக்கிறது; அடர்ந்த மரங்களுள்ள காட்டை அண்டி சிறு வெளி காணப்பட்டது அந்த வெளியை அண்டி ட்றக்ரர்கள் தரிக்க தயாராயின எல்லோரது ட்றக்ரர்களும் வந்து சேருகின்றன.

வேதா இறங்கி நடந்து வந்தான். சிரித்துக் கொண்டவாறே ஜெகன் ஆச்சரியத்தோடு ''என்னடாப்பா. இந்தப் பாதையில ஓடுறது… — இரவும் நித்திரையில்லை சாதுவா தூங்கி விட்டா எல்லாம் போய்ச்சுது'' எனச் சொல்லிக் கொண்டு தோளில் கை போட்டு சிரித்துக் குதூகலித்து நிற்கின்றனர்.

ட்றக்ரர் பெட்டிகளுக்குள்ளேயும் தோழர்கள் குறண்டிக் கொண்டு கிடக்கின்றனர்.

விடிவதற்கு சில மணி நேரங்களே இருந்தன:

குளிர்காற்று மேனியைக் குளிர்த்தி அழுத்திச் சென்றது. மரங்களில் இருந்து பனி நீர்த்துளிகள் சிந்திக் கொண்டிருக்கின்றது. பறவைகள் விடியலுக்கான கீதம் இசைத்துக் கொண்டிருக்கின்றன. ட்றக்ரர்கள் மீதும் பனி நீர்கள் படிந்திருக்கின்றன.

விடிய நடைப்பயணம் மேற் கொள்ள வேண்டியிருந்தது. சிங்கள இராணுவத்தினர் காட்டுள் வரலாம். என்ற ஐயப்பாட்டின் பேரில் காவல் பலப்படுத்தப்பட்டிருக்கின்றது. காட்டில் மணல் பகுதியாக இருந்த இடத்தை நோக்கி வேதாவும் சைமனும் ஜெகனும் ஓய்வை எடுத்துக் கொள்வதற்காக சென்று கொண்டிருக்கின்றனர்.

சூரிய உதயத்தோடே அந்த நீண்ட வழிப்பயணம் ஆரம்பமாயிற்று. நீண்ட ஒற்றையடிப்பாதைகள். அந்தப்பாதைகள் நெளிந்தும் கிடந்தன.

காடு பற்றிய அறிவு உடையவர்களால் மட்டுமே அங்கு நகர்ந்து கொள்ள முடியும்.

சிறந்த வழி காட்டியாக காந்தியண்ணனும் செயற்பட்டார்: சுற்றிலும் பழகிய காட்டுச் சூழல். இராணுவ சீருடைகளோடும் இயந்திரத்துப்பாக்கிகளோடும் வரிசையாகநகர்ந்து கொண்டிருக்கின்றது. அதிகாலைப் பொழுதிலிருந்து நடக்கத் தொடங்கியவர்கள் இன்றும் பல மைல்கள் நடக்க வேண்டியிருந்தது:

''எனது நாட்டில் ஒரு சாண் நிலம்
எஞ்சி இருக்கும் வரை'
எமது வீரர்கள் நடந்த பாதைச் சுவடுகள்
இருக்கும் வரை
''எனது தன்னுணர்வு இருக்கும் வரை
விடுதலைக்கான பயங்கரப் போரை
எதிரியின் எதிரில் நான் பிரகடனம் செய்வேன்''

என்ற தொனிப்பு அந்த வரிசையின் நகர்வில் இருந்து எழுந்து கொண்டிருக்கின்றது.

எல்லோர் முகத்திலும் சந்தோஷம் நிறைந்து கிடக்கின்றது. அவர்கள் உறுதியாக நடந்து கொண்டிருக்கின்றார்கள்.

— தொடரும்